**மாதிரி வினாத்தாள்**

நிறுமக் கணக்குகள் - பகுதி III

12th Standard

**கணக்குப்பதிவியல்**

Reg.No. :

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.

Time : 01:30:00 Hrs | Total Marks : 85

## பகுதி - அ

5 x 1 = 5

1) பொதுவாக முதல் என்பது ............... நோக்கத்திற்காக வணிகத்தில் பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட தொகையைக் குறிக்கின்றது.

2) ........... பொது மக்கள் வாங்குவதற்கு வெளியிடப்பட்ட அங்கீகரித்த பங்கு முதலில் ஒரு பகுதியைக் குறிக்கின்றது.

3) ........... என்பது வெளியிட்ட முதலில் பொதுமக்கள் வாங்குவதற்கு ஒப்புக் கொண்ட தொகையைக் குறிக்கின்றது.

4) வெளியிட்ட முதலுக்கும், ஒப்பிய முதலுக்கும் இடையேயான வேறுபாடு ......... எனப்படும்.

5) ஒப்பிய முதலின் மீது நிறுமத்தால் பணம் செலுத்தப்பட அழைத்த தொகை .............. எனப்படும்.

## பகுதி - ஆ

8 x 5 = 40

6) ஒறுப்பிழப்பு செய்த பங்குகளை மறுவெளியீடு செய்வது குறித்து குறிப்பு வரைக.

7) வினோத் வரையறு நிறுமம் ரூ. 10 வீதம் 40,000 முன்னுரிமைப் பங்குகளை ரூ. 3 முனைமத்தில் வெளியிட்டது. உரிய குறிப்பேட்டுப் பதிவினை தருக.

8) ஸ்ரீதர் வரையறு நிறுமம் ரூ. 100 வீதம் 20,000 பங்குகளை 10 % தள்ளுபடியில் வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவினை தருக.

9) பகவதி வரையறு நிறுமம் பங்கொன்று ரூ. 10 வீதம் 10,000 பங்குகளை 10 % தள்ளுபடியில் பின்வருமாறு செலுத்தும் வண்ணம் வெளியிடப்பட்டது.

விண்ணப்பத்தின் போது ரூ. 2.50

ஒதுக்கீட்டின் போது ரூ. 3.00

முதலாவது மற்றும் இறுதி

அழைப்பின் போது ரூ. 3.50 100 பங்குகள் மீதான இறுதி அழைப்பு தவிர ஏனைய தொகைகள் அனைத்தும் பெறப்பட்டன. இப்பங்குகளை உரிய அறிவிப்பு கொடுத்து நிறுமம் ஒறுப்பிழப்பு செய்தது. ஒறுப்பிழப்புக்கான பதிவினைச் செய்க.

10) எத்திராஜ் லிமிடெட் பங்கொன்று ரூ.100 வீதம் 1,00,000 பங்குகளாக வெளியிட்டது.

விண்ணப்பத்தின்போது ரூ.20 பொது மக்களால், ஒப்பப்பட்ட 80,000 பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

11) ஜெயராம் லிமிடெட் பங்கொன்று ரூ.10 வீதம்,1,50,000 பங்குகளை வெளியிட்டது.விண்ணப்பத்தின் போது ரூ3 ஆனால் 1,75,000 பங்குகள் வேண்டி விண்ணப்பங்கள் பெறப்பட்டன.15,000 பங்குகளுக்கான விண்ணப்பங்களை நிராகரித்து திருப்பி விட்டனர். மீதமுள்ள விண்ணப்பங்கள் விகித அளவு அடிப்படையில் ஓதுக்கீடு செய்யப்பட்டன, விகித அளவு அட்டவணையைத் தயாரிக்க.

12) மனோஜ் கார்மெண்ட்ஸ் லிமிடெட் பங்கொன்று ரூ.10 வீதம் 50,000 பங்குகளை ரூ.1 முனைமத்தில் வெளியிட்டது. ஒதுக்கீட்டின் போது ரூ.4(முனைமம் உட்பட) ஒதுக்கீடு குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

13) ராதிகா லிமிடெட் பங்கொன்று ரூ.100 வீதம் 1,00,000 முன்னுரிமை பங்குகளை வெளியிட்டது.

முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ரூ.3. 1000 பங்குகளின் அழைப்புத் தொகையைத் தவிர ஏனைய பங்குகள் மீது அனைத்துத் தொகையும் பெறப்பட்டது.

பங்கு அழைப்பின் குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

## பகுதி - இ

2 x 20 = 40

14) சந்தோஷ் வரையறு நிறுமம் பங்கொன்று ரூ.100 விதம் 5,000 நேர்மைப் பங்குகளை பொதுமக்களுக்கு வெளியிட்டது.தொகை கீழ்வருமாறு செலுத்தப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| விண்ணப்பத்தின் போது | ரூ | 30 |
| ஒதுக்கீட்டின் போது | ரூ | 30 |
| முதலாவது அழைப்பின் போது | ரூ | 40 |

பொது மக்களால் ஒப்பப்பட்ட 4,000 பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.200 பங்குகள் மீதான அழைப்புத் தொகை தவிர ஏனைய தொகைகள் அனைத்தும் பெறப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

15) செண்பகம் வரையறு நிறுமம் ரூ.100 விகிதம் 20,000 பங்குகளை பின்வருமாறு செலுத்தும் வண்ணம் வெளியிட்டது.

| | | |
|---|---|---|
| விண்ணப்பத்தின் போது | ரூ | 25 |
| ஒதுக்கீட்டின் போது | ரூ | 25 |
| முதலாவது அழைப்பின் போது | ரூ | 20 |
| இறுதி அழைப்பின் போது | ரூ | 30 |

18,000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டன.200 பங்குகளுக்கான இறுதி அழைப்புத் தொகையும் பெறப்பட்டது குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

*****************************************